# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2019/11 - 2017 මැයි මස 16 වැනි අඟහරුවාදා - 2017.05.16

*2019/11 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், மாநகர மற்றும் மேல் மாகாண விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் இங்கு கீழ்க்காணும் அட்டவணை I மற்றும் II இல் விபரிக்கப்பட்டுள்ள காணிப்பகுதிகள் முறையே அரச ஊழியர்களுக்கான மாடி வீட்டுக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகரமொன்றை நிர்மாணித்தல் சார்ந்த நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உடனடியாகத் தேவைப்படுகிறதென்பது எனது அபிப்பிராயமானதால் குறிப்பிட்ட காணிகள் தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படுகிறதென இக்கட்டளைமூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு 01 ,*
*2017, மே 09.*

**அட்டவணை I**

*மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லையின் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவினுள், பொரளை கிராமத்தில் (பிரிவு இல. 33, பொரளை வடக்கு) அமையப்பெற்றுள்ளதும், பொரளை, பெலன்கஸ்துடுவை வீதியில் சோலைவரி இல. 265 (பகுதியொன்று) ஆன நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கொ/டிஎஸ்ஓ/2015/102 ஆம் இலக்கம் மற்றும் 2016.03.23 ஆந் திகதிய பிரித்தெடுப்பின் துண்டு இல. "A" மூலம் காட்டப்பட்டுள்ளதுமான சுமார் 0 ஏக்கர் 01 றூட் 0.31 பேர்ச்சஸ் (0.1020 ஹெக்டெயார் ) அளவைக் கொணட காணிப்பகுதிக்குரிய எல்லைகள் கீழ்வருமாறு :-*

*வடக்கு : பெலென்கஸ்துடுவை வீதி, பெலென்கஸ்துடுவை வீதியின் சோலைவரி இலக்கத்தைத் தேடிக்கொள்ள முடியாத காணி, சோலைவரி இல. 249 ஐக் கொண்ட காணி மற்றும் கொ.8426 ஐக்கொண்ட ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 1 ;*

*கிழக்கு : கொ. 8426 ஆம் ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 1;*

*தெற்கு : சர்பன்ரையின் வீதியின் சோலைவரி இல. 10/8 மற்றும் 10/9 கொண்ட காணிகள் ;*

*மேற்கு : பெலென்கஸ்துடுவை வீதி.*

1A - G 25549 — 17 (2017/05)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** II

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவின் கிரிவத்துடுவ வடக்கு கிராம அலுவலர் பிரிவின் மூனமலே கிராமத்தில் அமைந்துள்ளதும் காணிக்கு உரியதாக வரையப்பட்டுள்ள தள வரைபடத்தில் துண்டு அட்சர இல.* "A" *எனக் காட்டப்பட்டுள்ளதுமான சுமார் 30 ஏக்கர் 00 றூட் 00 பேர்ச்சஸ் அளவுடைய கத்தோனிஸ்வத்த என்ற காணிக்குரிய எல்லைகள் கீழ் வருமாறு :-*

*வடக்கு :* *வெளிமதகு, கோனவல வயல், கோனவலை வீதி மற்றும் கங்கானி லான்ட் சேல் காணி ;*

*கிழக்கு :* *கங்காணி லான்ட் சேல் காணி மற்றும் மூனமலேவத்த வீதி ;*

*தெற்கு :* *சாவிக்கா ஒடோமேஷன் பொறியியல் (தனியார்) கம்பனி, சோலைவரி இல. 205/2/8* B *உடைய ஐ. டபிள்யூ. பிரேமலதா, கம்மாலை வீதி, சோலைவரி இல. 205/4/2, சோலைவரி இல. 205/1 உடைய கே. ஜி. பியசேன வயல் மற்றும் வெளிமதகு ;*

*மேற்கு :* *சோலைவரி இல. 205/2/8*B *உடைய ஐ. டபிள்யூ. பிரேமலதா, கம்மாலை வீதி, சோலைவரி இல. 205/4/2, சோலைவரி இல. 205/1ஐ உடைய கே. ஜி. பியசேன, வயல் மற்றும் வெளிக்கால்வாய் மற்றும் கோனவல வயல்.*

*06- 47*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*